# The Emergence and Contextual Background of Introductory Works on Literary Criticism in Tamil

**R. Veeramani**
*Ph.D. Research Scholar*
*Subramania Bharathi School Tamil Language and Literature*
*Pondicherry University, Puducherry*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255946

**Abstract**
*In the Tamil context, scholars have acknowledged the existence of a traditional practice of literary criticism dating back to ancient times. However, this tradition is not connected with current literary paradigms such as Marxism, Modernism-Postmodernism, Structuralism-Poststructuralism, Postcolonialism, Dalit studies, Feminism, or Ecocriticism. Instead, it was reflected in areas like the printing of ancient Tamil literary manuscripts, source text research, the linguistic heritage of the Dravidian-Tamil community, chronological study of literary works, and the establishment of Tamil's grammatical uniqueness. Hence, there was no immediate necessity for such modern theoretical frameworks in that period. Only recently has criticism emerged focusing on social, cultural, and political bases, especially emphasizing the need for 'text' beyond the creator or author and addressing reception theory. Likewise, it is undeniable that contemporary critical approaches influenced by these modern theories have become widespread in the study of ancient Tamil literature. Typically, analysis of any literary text increasingly reflects interpretations drawn from one or more theoretical frameworks. Given this context, an inquiry arises whether early critical texts articulated such theoretical readings and what their content reveals about the nature of criticism at that time. Additionally, understanding the literary positions of early critics who authored these works is necessary. This article is written based on that premise.*
***Keywords:*** *Tamil Literary Criticism, Modern Western Theories, Critical Theory in Tamil, Academic and Non-Academic Critics*

**References**

1. Sivathambi, Ka., Tamil Literature in Eelam, 1978, Tamil Puthakalayam, Chennai.
2. Subramaniam, Ka.Na., The Art of Criticism, 2014, Puthuppunal, Chennai - 05.
3. Subramaniya Iyer, A.V., Tamil Literature: Contemporary Period, 2023, Malar Books, Chennai - 106.
4. Gnanasambandhan, A.Sa., Literary Art, 2016, Mullai Nilayam, Chennai - 17.
5. Varadharasan, Mu., Literary Tradition, 1960, Pari Nilayam, Chennai - 01.
6. Nadarasan, Thi.Su., The Art of Critical Analysis, 2022, New Century Book House, Chennai - 50.
7. Panchankam, Ka., History of Tamil Literary Criticism, 2014, Annam, Thanjavur - 07.
8. Palanivelu, K., Theory and Criticism, 2020, Annam, Thanjavur - 07.
9. Mathiyalagan, Ma., History of Tamil Research and Criticism, 2009, Mithra Publications, Chennai - 24.
10. Raghunathan, Tho.Mu.Si., Literary Criticism, 2022, Tamil Nadu Textbook and Educational Services Corporation, Chennai - 06.
11. Varadharasan, Mu., Literary Competence, 2018, Pari Nilayam, Chennai - 108.

# தமிழில் இலக்கியத் திறனாய்வுசார் அறிமுக நூல்களின் வரவும் உள்ளடக்கப் பின்புலமும்

***இரா. வீரமணி***
முனைவர் பட்ட ஆய்வாளர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம்
புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ்ச் சூழலில் பண்டைக் காலந்தொட்டுத் 'திறனாய்வு / விமரிசனம்' செய்யும் மரபு இருந்துவருவதாக அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், அம்மரபானது இன்றைய இலக்கியச் சூழலில் நிலவி வந்த, வருகின்ற மார்ச்சியம், நவீனத்துவம் – பின்நவீனத்துவம், அமைப்பியல் – பின்னமைப்பியல், பின்காலனியம், தலித்தியம், பெண்ணியம், சூழலியம் போன்ற கோட்பாட்டுப் பின்புலங்களில் நிகழ்த்தப்பட்டவை அல்ல; பழந்தமிழிலக்கியப் பிரதிகளின் அச்சாக்கம், மூலப்பாட ஆராய்ச்சி, திராவிட – தமிழ் இனத்தின் மொழித் தொ(த)ன்மை, இலக்கியங்களின் கால ஆராய்ச்சி, தமிழின் செவ்வியல் தன்மையை நிலைநிறுத்தல் போன்ற பல்வேறு தளங்களில் அதன் வீச்சு இருந்தமையால், அதற்கான அவசியமும் அக்காலகட்டத்தில் ஏற்படவில்லை. ஆனால், சமூக, பண்பாட்டு, அரசியல் அடிப்படைகளை மையமாகக் கொண்டு, குறிப்பாகப் படைப்பு, படைப்பாளியைக் கடந்து பனுவல்* (Text) *என்கிற ஆக்கத்தின் தேவையையும் அது நிகழ்த்தியுள்ள பிரதியரசியலையும் வெளிக்கொணரும் போக்குப் பிற்காலத்தின் தேவையாக எழுந்தது எனலாம். அதேபோல், மேற்கண்ட திறனாய்வுக் கோட்பாடுகளைக் கொண்டு, பழந்தமிழ் இலக்கியங்களை அணுகும் திறனாய்வு முறையானது சமீப காலங்களில் பரவலாக நிகழ்ந்து வருவதையும் மறுக்கமுடியாது. பொதுவாக, ஏதேனும் ஓர் இலக்கியப் பிரதியை எடுத்துக்கொண்டு அதன் உட்பொருளை ஏதேனும் ஒரு கோட்பாட்டுப் பின்புலத்தின் வெளிக்கொணரும் போக்குப் பெருகிவருவதைக் காணமுடிகிறது. இந்நிலையில், திறனாய்வு குறித்து எழுந்த தொடக்க கால நூல்களின் உள்ளடக்கங்களில் இத்தகைய கோட்பாட்டு வாசிப்புகள் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளனவா? அவற்றின் உள்ளடக்கங்களின் வழி அன்றைக்கிருந்த திறனாய்வின் நிலை என்ன? அத்திறனாய்வு நூல்களைத் தந்த நூலாசிரியர்களின் இலக்கியம் குறித்த நிலைப்பாடுகள் யாது? முதலானவற்றை அறிய வேண்டிய தேவையுள்ளது. இந்த அடிப்படையில் இக்கட்டுரையானது எழுதப்பட்டுள்ளது.*
***திறவுச்சொற்கள்:*** *திறனாய்வுக் கோட்பாடுகள், மேலைத் திறனாய்வுகள், தமிழ்த் திறனாய்வுகள், கல்வியாளர் அல்லாதார் மற்றும் கல்வியாளர்கள் திறனாய்வுகள்*

**முன்னுரை**

தமிழிலக்கியச் சூழலில், “திறனாய்வு / விமரிசனம்” என்கிற சிந்தனைத் துறையைத் தனி நூலின் மூலமாக விரிவாக அறிமுகப்படுத்திய காலகட்டமாக, கடந்த நூற்றாண்டின் செம்பாதியைக் குறிப்பிடலாம். தமிழ் இலக்கியப் புலத்தை, மேனாட்டின் இலக்கியத் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் நோக்கில் இத்திறனாய்வுச் சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு, தமிழில் திறனாய்வுக்கென்று தனிநூலை வழங்கியவர்களாக, தொ.மு.சி.ரகுநாதன் *(1923-2001)*, க.நா.சுப்ரமண்யம் *(1912-1988)*, அ.ச.ஞானசம்பந்தன் *(1916-2002)* மற்றும் மு.வரதராசன் *(1912-1974)* முதலானோரைக் காணமுடிகிறது. காலம், மொழி, இனம் சார்ந்த இறந்தகாலத்தைப் பற்றிய இலக்கிய ஆராய்ச்சிகள் நிகழ்ந்த அன்றைய சூழலில், இந்நால்வரின் தொடக்க காலத் திறனாய்வு சார் அறிமுக நூல்கள், கடந்த கால

இலக்கியப் போக்கை அலசுவது மட்டுமன்றி, நிகழ்கால மற்றும் எதிர்கால இலக்கியப் போக்கைக் குறித்த பிரக்ஞையோடு எங்ஙனம் எழுதப்பட்டுள்ளன என்பதை ஆராயவேண்டியுள்ளது. அவ்வகையில், தமிழில் நிகழ்த்தப் பெற்ற இந்நால்வரின் தொடக்க காலத் திறனாய்வு முயற்சிகளின் முக்கியத்துவத்தை இனங்காணும் நோக்கில், அவற்றின் வரவையும் அதன் உள்ளடக்கப் பின்புலத்தையும் ஆராய விழைகிறது, இக்கட்டுரை.

## தமிழில் திறனாய்வு x விமரிசனம் - சொற்புழக்கம்

தமிழில் பெரும்பாலும் இலக்கிய (செய்யுள்), இலக்கணத்தின் (சூத்திரம்) உட்பொருளை ஆராய்ந்து எடுத்துரைக்கும் பிரதிகளாக உரைகள் இருந்திருக்கின்றன. அவை பெரும்பாலும் மூலநூலாசிரியரின் கருத்து என்ன என்பதை எடுத்துரைக்கவே பயன்பட்டிருக்கின்றன. உரைகாரர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தங்கள் காலத்தின் பொருளமைதிகளை அல்லது கருத்துகளைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். இந்நிலையில், இருபதாம் நூற்றாண்டில் இத்தகைய போக்கில் மாற்றம் நிகழ்ந்துள்ளதை அறியமுடிகிறது. உரைகளைத் தாண்டி, மேலைநாட்டு இலக்கியக் கோட்பாட்டுப் பின்புலத்தை வைத்துக்கொண்டு தமிழ் இலக்கியத்தின் கனதியை வெளிக்கொணரும் செயல்பாடாக அது அமைந்தது எனலாம். அவர்களின் இச்செயல்களை அடையாளம் காணவும் வெவ்வேறு சொற்புழக்கங்கள் இருந்துள்ளன. அவற்றில் குறிப்பிடத் தக்கவை, "திறனாய்வு" மற்றும் "விமரிசனம்" என்பவையாகும். பெரும்பாலும், கல்விப் புலம் சார்ந்த திறனாய்வாளர்கள் மத்தியில், "திறனாய்வு" என்கிற சொல்லும், கல்விப்புலம் சாராத திறனாய்வாளர்கள் மத்தியில் "விமரிசனம்" அல்லது "விமர்ச(ஸ)னம்" என்கிற சொல்லும் நிலைபேறு அடைந்துள்ளது. இதில் தொ.மு.சி.ரகுநாதன், க.நா.சுப்ரமண்யம் போன்ற கல்விப்புலம் சாராதவர்கள் "விமரிசனம்" என்கிற சொல்லைக் கையாண்டவர்களாகக் காணமுடிகிறது. "திறனாய்வு" என்கிற சொல்லைப் புழக்கத்தில் கொண்டு வந்தவராக அறியப்படும் அ.ச.ஞானசம்பந்தன் மற்றும் அவருக்குப் பின் வந்த மு.வரதராசன் ஆகியோரைக் கல்விப் புலம் சார்ந்த திறனாய்வாளர்களாக அறியமுடிகிறது. "திறனறிந்து" என்ற சொல்லாட்சி திருக்குறள் காலகட்டத்திலேயே குறிப்பிடப்பட்டிருந்தாலும், "விமரிசனம்" என்ற சொல்லாட்சியே இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் "Criticism' என்கிற சொல்லினைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளதைத் தி.சு.நடராசனின் "திறனாய்வுக் கலை" நூலின்வழி அறிய முடிகிறது.

## தமிழில் எழுந்த திறனாய்வு குறித்த தொடக்க கால நூல்கள்

தமிழில் "விமரிசனம்" அல்லது "திறனாய்வு" சார்ந்து எழுந்த தொடக்க காலத் தனி நூல்களாக, தொ.மு.சி.ரகுநாதனின் "இலக்கிய விமர்சனம்" *(1948)*, க.நா.சுப்ரமண்யத்தின் "விமரிசனக்கலை" *(1951)*, அ.ச.ஞானசம்பந்தத்தின் "இலக்கியக்கலை" *(1953)*, மு.வரதராசனின் "இலக்கியத் திறன்" *(1959)*, "இலக்கிய மரபு" *(1960)* ஆகிய ஐந்து நூல்களை இனஞ்சுட்டலாம். இந்நூல்கள் யாவும் தமிழ் இலக்கியத்தின் உள்ளடக்கத்தைப் பேசும் அதேவேளையில், உலக இலக்கியத் தளத்திற்கு அவற்றை எங்ஙனம் உயர்த்துவது என்கிற விழைவோடு எழுதப்பட்டவையாகக் குறிப்பிடலாம். ஆனால், முன்னவர்கள் இருவரும் கல்விப் புலம் சாராதவர்களாக இருப்பதாலும் பின்னவர்கள் இருவரும் கல்வியாளர்களாக இருப்பதாலும் அவர்களின் எடுத்துரைப்பு முறையிலும் பேசும் பொருள் ஆழத்திலும் எடுத்துக்காட்டும் மேற்கோள்களிலும் சில இடங்களில் ஒன்றுபடுவதையும், சில

இடங்களில் வேறுபடுவதையும் காணமுடிகிறது. இனி அவர்தம் நூல்களின் உள்ளடக்கத் தினை அலச முற்படலாம்.

**திறனாய்வு குறித்த தொடக்க கால நூல்களின் உள்ளடக்கங்கள்**

தமிழில் எழுதப்பட்ட இந்நால்வரின் நூல்களின் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ள அடிப்படையாகச் சில கேள்விகளை எழுப்பிக் கொள்ள வேண்டியுள்ளது. அவ்வகையில், திறனாய்வு - விமரிசனம் சார்ந்த அவர்தம் புரிதல்கள் என்னவாக இருந்தன? மொழி, இலக்கியம் குறித்த அவர்தம் பார்வை யாது? நவீன இலக்கிய வகைமைகளை எங்ஙனம் அணுகினர்? தங்கள் கருத்துகளை நிறுவுவதற்குத் துணை கொண்ட மேனாட்டறிஞர்கள் யாவர்? போன்ற கண்ணோட்டங்களில் இந்த நால்வரின் பிரதிகளை அணுகலாம். இதற்கு வலு சேர்க்கும் விதமாக, இவர்தம் திறனாய்வு முறைகள் குறித்த பிற திறனாய்வறிஞர்களின் பார்வை என்ன? என்பதையும் கருத் திற்கொள்ளவேண்டும். இதன் வாயிலாக, தமிழ்த் திறனாய்வுச் சூழலில் நால்வரின் தொடக்க காலப் பங்களிப்புகள் என்ன? என்பதை ஒருவாறு உய்த்துணர முடியும். அவ்வகையில், பின்வரும் அட்டவணையானது அவர்களின் திறனாய்வுப் பிரதிகளின் உள்ளடக்கங்களை மையமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1**

| பொருள் | தொ.மு.சி. | க.நா.சு. | அ.ச.ஞா. | மு.வ. |
|---|---|---|---|---|
| கலை பற்றிய பார்வை | கலை என்பது மனிதச் சிந்தனையின் வெளிப்பாடு | எந்த அளவுகோல் கொண்டு பார்த்தாலும், எந்த இலக்கணத்தை வைத்துப் பார்த்தாலும் அப்பால் நிற்பது - தனித்துவம் மிக்கது | கலை கலைக்காகவே - கலைகளெல்லாம் அழகின் அடிப்படையில் தோன்றியவையே | உணர்ச்சியும் கற்பனையும் கொண்டு வளர்வது கலை |
| மொழி, இலக்கியம் பற்றிய பார்வை | இலக்கியத் தின் வரம்பு - கலைஞனின் மனோபாவம் - படைப்பு நுட்பம் | எதுவாக இருந்தாலும் அதிலோர் தமிழ் உயிர் வேண்டும் | இலக்கியத்தில்தான் கலை முழுவதும் குறிக்கோள் தன்மையை அடை கிறது | அரசியல் செல்வாக்கு, விளம்பர ஆற்றல், சமயச் சார்பு - தேவை |
| மேனாட்டு அறிஞர்கள் | மேத்யூ அர்னால்ட், ஐபர் எவான்ஸ், ஜோட் | கதே, ஸாந்த் போவ், ஹென்றி ஜேம்ஸ், எஸ்.டி.கோலரிட்ஜ், மேத்யூ அர்னால்ட், | கீட்ஸ், ஐ.ஏ.ரிச்ச ர்ட்ஸ், மேத்யூ அர்னால்ட், கோலரிட்ஜ், எமர்சன் | ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ், பிரௌன், மேத்யூ அர்னால்ட், வின்ச்செ ஸ்டர் |
| மேற்கோள் | இலக்கியம் என்பது வாழ்க்கையின் விமர்சனம் - மேத்யூ அர்னால்ட் (ப.3) | The golden rule is that there is no golden rule & Unkown (£.63) | அழகிய பொருள் என்றும் இன்பந் தருவது - கீட்ஸ் (ப.304) | ஆராய்ச்சியாளர் மன நலத்தில் அக்கறை கொண்டவராக இருத்தல் வேண்டும் - ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் (ப.280) |

கலை பற்றிய பார்வை கலை என்பது மனிதச் சிந்தனையின் வெளிப்பாடு எந்த அளவுகோல் கொண்டு பார்த்தாலும், எந்த இலக்கணத்தை வைத்துப் பார்த்தாலும் அப்பால் நிற்பது - தனித்துவம் மிக்கது கலை கலைக்காகவே - கலைகளெல்லாம் அழகின் அடிப்படையில் தோன்றியவையே உணர்ச்சியும் கற்பனையும் கொண்டு வளர்வது கலை

**மொழி, இலக்கியம் பற்றிய பார்வை**

இலக்கியத்தின் வரம்பு - கலைஞனின் மனோபாவம் - படைப்பு நுட்பம் எதுவாக

இருந்தாலும் அதிலோர் தமிழ் உயிர் வேண்டும் இலக்கியத்தில் தான் கலை முழுவதும் குறிக்கோள் தன்மையை அடைகிறது

**அரசியல் செல்வாக்கு, விளம்பர ஆற்றல், சமயச் சார்பு - தேவை**

மேனாட்டு அறிஞர்கள் மேத்யூ அர்னால்ட், ஐபர் எவான்ஸ், ஜோட் கதே, ஸாந்த் போவ், ஹென்றி ஜேம்ஸ், எஸ்.டி.கோலரிட்ஜ், மேத்யூ அர்னால்ட், கீட்ஸ், ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ், மேத்யூ அர்னால்ட், கோலரிட்ஜ், எமர்சன் ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ், பிரௌன், மேத்யூ அர்னால்ட், வின்ச்செஸ்டர்

மேற்கோள் இலக்கியம் என்பது வாழ்க்கையின் விமர்சனம் - மேத்யூ அர்னால்ட் (ப.3) The golden rule is that there is no golden rule & Unkown (ப.63) அழகிய பொருள் என்றும் இன்பந் தருவது - கீட்ஸ் (ப.304) ஆராய்ச்சியாளர் மன நலத்தில் அக்கறை கொண்டவராக இருத்தல் வேண்டும் - ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் (ப.280)

**திறனாய்வு குறித்த தொடக்க கால நூலாசிரியர்களின் போக்குகள்**

தமிழில் கல்வியாளர்கள் x கல்வியாளர்கள் அல்லாதோர் என்கிற இருதரப்புத் திறனாய்வுப் போக்குகளை இனங்காண, அவர்கள் எடுத்துக்கொண்ட மரபிலக்கியங்கள் x நவீன இலக்கியங்கள் சார்ந்த பார்வையைக் குறிப்பிடலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி முதலே தமிழில் நவீன இலக்கிய வடிவங்கள் (புதினம், சிறுகதை, வசன கவிதை) அடுத்தடுத்துத் தோன்றிவந்தாலும், கல்வியாளர்கள் மத்தியில் இருபதாம் நூற்றாண்டின் பாதி வரைக்கும் நவீன இலக்கியங்களைத் தமிழ் இலக்கியத்தின் ஒரு அங்கமாக ஏற்றுக்கொள்ளவதில் தயக்கம் இருந்துள்ளது. இதற்குக் காரணமாகப் பேரா. க.பஞ்சாங்கம் குறிப்பிடும், கல்வியாளர்களில் பெரும்பாலோர் பிரச்சனைகள் முளைக்க வாய்ப்புள்ள தற்கால இலக்கியங்களை விடப் பழம்பெரும் இலக்கியங்களைப் பற்றிப் பேசவே இன்றும் விரும்புகின்றனர். (க.பஞ்சாங்கம், தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, ப.87) எனும் கருத்தை உய்த்துணரலாம். இது அக்காலக் கல்வியாளர்கள் மட்டுமன்றி இக்காலத்தினருக்கும் பொருந்தி வருவதைக் குறிப்பிடுகிறார். அதேவேளையில், நவீன இலக்கிய வாசிப்புகளை முன்னிறுத்திய கல்வியாளர்களும் இருந்துள்ளனர். ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், 1933ஆம் ஆண்டு “தமிழ் இலக்கியம் - தற்காலம்’ எனும் தனி நூலை வெளியிட்டிருப்பதை இதற்குச் சான்று காட்டலாம். எனினும், இந்நூலிலும் நவீன இலக்கிய எழுத்தாளர்களுள் வெகுசிலரை மட்டும் தொட்டுக்காட்டிச் செல்கிறார் என்பது கவனிக்கத்தக்கது. இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் வி.செல்வநாயகம் என்பவர் 1951இல் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்றில் நவீன இலக்கியங்களுக்கும் இலக்கிய விமரிசனத்துக்கும் தனித்த பகுதியை ஒதுக்கியிருக்கிறார் என்கிற செய்தியைப் பேரா.ம.மதியழகன் “தமிழாய்வு- திறனாய்வு வரலாறு” (ப.180) நூலில் குறிப்பிட்டுச் சொல்கிறார். இத்துடன் அவர்தம் திறனாய்வுக் கண்ணோட்டம் குறித்து, பேரா. கா.சிவத்தம்பி குறிப்பிடுவது:

தமிழக அறிஞர்கள் விமரிசன நூல்களென கண்ணோட்டத் தெளிவற்ற ஆங்கில மேற்கோட்கலவைகளை வெளியிட்டு வந்த காலத்தில் ஐ.ஏ.றிச்சாட்சின் இலக்கிய விமரிசனக் கோட்பாடுகளுக்கு இயையத் தமது விரிவுரைகளை அமைத்து மாணவரின் இலக்கியக் கண்ணோட்டத்தினைச் செம்மைப் படுத்தியவர் பேராசிரியர் செல்வநாயகம் ஆவார். (கா.சிவத்தம்பி, ஈழத்தில் தமிழ் இலக்கியம், ப.133)

எனும் கூற்று உற்றுநோக்கத்தக்கது. தமிழகத்தைச் சேர்ந்த அறிஞர்கள் என அ.ச.ஞானசம்பந்தன், மு.வரதராசன் போன்றோரின் நூல்களையே குறிப்பிடுகிறார்

என்பதைப் பேரா.க.பஞ்சாங்கம் தம் திறனாய்வு வரலாற்று நூலில் எடுத்துக் காட்டுகிறார். எனினும், பழந்தமிழ் இலக்கியங்களில் ஊறித் திளைத்தவர்கள், நவீன இலக்கிய வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவர்கள் என்று குற்றம்சாட்டி, இவர்களின் எழுத்துகள் யாவும் “பண்டிதத் திறனாய்வு” என்கிற முத்திரையிட்டு நேரடியாக இவர்களின் பங்களிப்புகளை க.நா.சு., கைலாசபதி போன்று ஒதுக்கிவிட முடியாது என்கிற நிலைப்பாட்டை முன்வைக்கிறார், பேரா.க.பஞ்சாங்கம்.

தமிழ்நாட்டின் மேனாள் முதல்வர் அண்ணாதுரையின் “தீ பரவட்டும்” என்ற பிரதியின் உள்ளடக்கப் பொருளை ஏற்க மறுக்கிறார், தமிழ் சைவப் பற்றாளரான அ.ச.ஞானசம்பந்தன். அண்ணாவின் “தீ பரவட்டும்” நூலில் பெரியபுராணத்தைத் திராவிட இனத்தோடு தொடர்புபடுத்துவதை எதிர்த்து, தேசிய உணர்வு சார்ந்த பிரதியாகக் கட்டமைக்க முயன்றிருக்கிறார், அ.ச.ஞானசம்பந்தன் என்பதைக் குறிப்பிடும் பேரா. கே.பழனிவேலு,

அரசியல் களத்தில் இலக்கியம் குறித்த சர்ச்சைகள் நிகழும்போது அதிகாரத்திற்கு விளிம்பில் இருந்து கட்டுப்படுவதுடன், கல்வியமைப்பில் மையத்தின் மனநிலையுடன் இயங்கும் கல்விப் பணியாளர்கள் தமது கருத்துகளை, மையத்தில் நிறுத்துகின்ற முயற்சிகளின் வெளிப்பாடாகவே கல்வியாளர்களின் திராவிட, தேசிய அரசியல் சார்ந்த இத்திறனாய்வுப் பணிகளைக் கருத வேண்டியுள்ளது. (கே.பழனிவேலு, கோட்பாடும் திறனாய்வும், ப.41)எனக் குறிப்பிட்டுச் செல்லும்பகுதி உற்று நோக்கத்தக்கது. கல்விப்புலம் சார்ந்தவர்களின் திறனாய்வுகளில் ஊடாடும் அரசியல் செயல்பாட்டை / நிலைப்பாட்டை வெளிக்கொணரும் வகையில் இக்கூற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. அதற்காக, கல்விப் புலம் சாராதவர்கள் அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடவில்லை எனச் சொல்லுவதற்கில்லை. க.கைலாசபதியின் “திறனாய்வுப் பிரச்சனைகள் - க.நா.சு. குழுவைப் பற்றிய ஓர் ஆய்வு’ எனும் நூலும், ராஜ் கௌதமனின் “எண்பதுகளில் தமிழ்க் கலாச்சாரம்”, ந.முருகேசபாண்டியனின் “படைப்பாளர்கள் விமர்சகர்கள்” எனும் நூல்களில் இவ்விரு தரப்பினரும் குழு மனப்பான்மை அரசியலோடு செயல்பட்டமைக்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன.

கல்வியாளர்கள் மத்தியில் நவீன இலக்கிய வாசிப்புப் பின்புலம் பெருகாத காலகட்டமாக இவர்களின் நூல்கள் பிரதிபலிக்கின்றன. நாவல் என்றால் வேதநாயகம்பிள்ளை, அ.மாதவையா, ராஜம் ஐயர், கல்கி, வை.மு.கோதைநாயகி போன்றோரையும் கவிதை என்றால் பாரதியார், ந.பிச்சமூர்த்தி, ச.து.யோகியார், பாரதிதாசன் போன்றோரையும் சிறுகதை என்றால் வ.வே.சு.ஐயர், புதுமைப்பித்தன், மௌனி, லா.ச.ராமாமிருதம், கு.ப.ராஜகோபாலன் போன்றோரையும், நாடகம் என்றால், பெ.சுந்தரம்பிள்ளை, பம்மல் சம்பந்தனார் போன்றோரையும் இனங்கண்டு சொல்லிச் செல்கின்றனர். அதேவேளை, உலகளவில் மேற்சொன்ன இலக்கி வகைகளில் பிரபலமாக இருக்கும் மாபசான், ஷேக்ஸ்பியர் உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகளை இனங்காணுகின்றனர். மேலும், மேத்யூ அர்னால்டின் “The Study of Poetry’, ஐ.ஏ.ரிச்சர்ட்ஸின் “Principles of Literary Criticism’, ].i.Âßaö\ìh›ß “Some Principles of Literary Criticism’, ஹட்ஸனின் “An Introduction to the study of Literature’ போன்ற நூல்கள் பெரும்பாலும் இவர்களின் நூல்களுக்கு உந்து சக்தியாக இருந்துள்ளதைக் காணமுடிகிறது. இனி நவீன இலக்கிய வடிவங்களைக் குறித்த அவர்களின் பார்வை என்னவாக இருந்திருக்கிறது என்பதை எதிர்வரும் அட்டவணை மூலம் உய்த்துணரலாம்.

**அட்டவணை 2**

| இலக்கிய வகை | தொ.மு.சி. | க.நா.சு. | அ.ச.ஞா. | மு.வ. |
|---|---|---|---|---|
| (வசன) கவிதை | யாப்பும் பொருளும் கூடி வரவேண்டும். வசன கவிதையை ஏற்கவில்லை. | உலகின் ஆதி இலக்கிய வடிவம் - பல வியாக்கியானங்கள் வந்துள்ளன | உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே கவிதை பிறக்கிறது | கலை வளம் இல்லாத செய்யுள் - கலை வளம் மிக்க பாட்டு |
| வசனம் / புதினம் / நாவல் | பேச்சு மொழியிலேயே எழுத வேண்டும் - வார்த்தை தெரிவு வேண்டும் | சோதனை முயற்சி கள் பெருக வேண்டும் - விஷயம் - நடை - தெளிவு | உண்மையைக் கூறவேண்டுமே தவிர, மெய்மையைக் கூறவேண்டியதில்லை | தனிமனித வாழ்க்கைக்கு முக்கியத்துவம் தரும் வடிவம் |
| சிறுகதை | உண்மையான பொய்யைச் சொல்வது - உருவம் தேவை | ஒரு சரடு வேண்டும் - சம்பவம் - உள்ளப்போராட்டம் - மனோபாவம் | எல்லைக்குள் அடங்கும் நிகழ்ச்சி | சிறிய வடிவில் முழுத்தன்மையைத் தருவது |
| நாடகம் | வாழ்வின் பிரதி பிம்பம் - பிரதியாக எழுதப்படுவதில் உயிர்ப்பில்லை. | தமிழில் நாடகம் சோபிக்கவில்லை - முக்கூடற்பள்ளு, குறவஞ்சி | நாடகம் என்பது கதையை நடித்துக்காட்டுவது - அரசனின் அரவணைப்பைக் கோருவது | உண்மைகளை நேரே உரைக்காத அறம் கூறும் முறை |

இவற்றின்வழி, நவீன இலக்கிய வடிவங்களின் உருவம், உள்ளடக்கம், விவரிப்பு முறை உள்ளிட்ட பல்வேறு கூறுகளை மேம்படுத்தும் நோக்கில் மேற்சுட்டிய கருத்தாக்கங்கள் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. ஆனால், தமிழர்களுக்கென்று தொல்காப்பியத்தில் வலியுறுத்தப்பட்ட நிலம், பொழுது மையமிட்ட திணை சார்ந்த பின்புலமும், அகம் - புறம் என்ற இலக்கியப் பாடுபொருள் சார்ந்த பின்புலமும் தமிழ் இலக்கியக் கோட்பாட்டுப் புரிதலோடு இருந்துள்ளதைத் தனிநாயக அடிகள், ஐயப்பப் பணிக்கர், பக்தவத்சல பாரதி, இந்திரா மனுவேல், முத்து சண்முகம், துரை.சீனிச்சாமி, நிர்மல் செல்வமணி, க.ஜவகர் உள்ளிட்ட பலரின் ஆய்வு முயற்சிகளால் அறியமுடிகிறது. ஆனால், இவர்களின் நூல்களில் தமிழ் இலக்கியத்திற்கெனத் தனிக் கோட்பாடு இருந்துள்ளது என்பது பற்றிய புரிதலோ, திணைக் கோட்பாட்டை நவீன இலக்கியங்கள் வரையில் பொருத்திமென்மேலும் வரைந்துகொள்ளவேண்டும் என்கிற எத்தனிப்போ, திணையொழுக்கம் பற்றிய சிந்தனையைக் கோட்பாடாக முன்வைப்பதில் முனைப்போ பெரிய அளவில் காணப்படவில்லை என எண்ணத் தோன்றுகிறது. அதேவேளை, மு.வ., அ.ச.ஞா. உள்ளிட்டோர் திணை பற்றிய புரிதலுடன் அக, புற இலக்கியப் பாடல்களைத் தம் நூலில் மேற்கோள்காட்டவும் தவறவில்லை. இனி இவர்தம் நூல்களின் வழி பெறப்படும் மதிப்பீடுகளைத் தொகுத்துக் காண்போம்.

## தொகுப்புரை

- தொ.மு.சி.ராகுநாதனிடம் தழைத்திருந்த இடதுசாரி கண்ணோட்டத்தினால், கலை, இலக்கியங்கள் மக்களுக்கானதாக இருக்க வேண்டும் என்பதில் தீர்க்கமாகச் செயல்பட விழைந்துள்ளார் என்பது, இருபத்திரண்டு வயதில் அவர் எழுதிய "இலக்கிய விமர்சனம்" நூலின்வழியாகப் புலனாகிறது.
- க.நா.சுப்ரமண்யத்தின் "விமரிசனக் கலை"யில் ஆற்றொழுக்கான விவரிப்பு (தனித் தனியான கட்டுரைகள்) இல்லையென்றாலும், விமரிசனம் என்பது எங்ஙனம் கலையாக்கம் பெறுகிறது,

இலக்கியத்தின் வளர்ச்சிக்கு விமரிசனம் எங்ஙனம் துணைசெய்ய வேண்டும் என்பதை விவரித்துச் செல்கிறார். அதேபோல், ஓரிரு இலக்கிய ஆக் கங்களைத் தவிர உலகளாவிய மட்டத்திற்குத் தமிழ் இலக்கியங்கள் உயரவில்லை என்று ஆற்றமையும் காணப்படுகிறது.

- கல்வியாளர்களின் திறனாய்வுகளில் பெரிதும் கவிதையாக்கம் / செய்யுள் கட்டமைப்புக் குறித்த கற்பனை வளம், உவமை, உருவகம், வடிவம், சொற்பொருள் நயம் சார்ந்த பகுதிகளுக்கு மிகுதியான பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. ஆனால், தொ. மு.சி. ராகுநாதன், க.நா.சுப்ரமண்யம் ஆகியோரின் நூல்களில் அத்தகைய உள்ளடக்கக் கட்டமைப்பு இல்லை.
- மேலை இலக்கியக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதும், அவற்றைத் தமிழ் இலக்கியத்தோடு பொருத்திப் பயன்படுத்துவதும் ஒருவகையான காலனிய மனோநிலை என்றாலும், உலகளாவிய சூழலில் இன்றைய காலகட்டத்திற்கு அது உகுந்ததாகவே பார்க்கமுடிகிறது. ஆனால், இருபதாம் நூற்றாண்டின் செம்பாதி வரையில் விளக்கமுறை, பகுப்பாய்வுமுறை, மூலப்பாட ஆய்வுமுறை போன்ற ஆய்வு அணுகுமுறைகளை இலக்கியத்தின் நயம் பாராட்டவே கையாண்டுள்ளனர் என்பதும் தெரியவருகிறது.
- கலை, இலக்கியச் சிந்தனைத் தளத்தில் “கலை கலைக்காகவே” என்கிற அணியில், க.நா.சுப்ரமண்யம், அ.ச.ஞானசம்பந்தன் ஒன்றுபடுவதையும், “கலை மக்களுக்காகவே” என்கிற அணியில் இடதுசாரி கண்ணோட்டத்து டன் தொ.மு.சி.ரகுநாதனும், திராவிட, தமிழின இயக்கச்சார்புடன் மு.வரதராசனும் ஒன்றிணைவதை அவர்களின் நூல்களின்வழி கண்டுகொள்ளலாம்.

### நிறைவுரை

இருபதாம்நூற்றாண்டளவில்ஆங்கிலேய ஆட்சியினால் பெறப்பட்ட கல்வியின் துணைகொண்டு கல்வி கற்ற தமிழர்களின் ஆங்கில இலக்கியப் புலமையை வெளிப்படுத்தும் ஒரு செயல்பாடாகவே திறனாய்வுகள் தொடக்க காலத்தில் நிகழ்ந்திருப்பதாக உணரமுடிகிறது. ஆனால் அதேவேளை, தமிழ் இலக்கியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள இந்நால்வரின் திறனாய்வு நூல்கள் துணை செய்கின்றன. மேலும், தமிழ் இலக்கியத்தின் எதிர்காலப் போக்கின் பிரக்ஞையுடன் இவர்களின்திறனாய்வுகள்செயல்பட்டுள்ளதையும் உய்த்துணரமுடிகிறது. தமிழவன், அ.மார்க்ஸ், க.பஞ்சாங்கம், தி.சு.நடராசன், எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா, எம்.ஜி.சுரேஷ், நாகார்ஜூனன், ஜமாலன்போன்றபிறதிறனாய்வாளர்களின் பங்களிப்புகளுக்கு முன்னொட்டாக இந்நூல்கள் திகழ்ந்துள்ளன என்பதை அறியமுடிகிறது. அதேபோல், இன்றைக்கு வழங்கப்பெறும் பல்வேறு மேலை இலக்கிய இஸங்கள் சார்ந்த பார்வைகள் துளிர்விட்ட காலகட்டத்தில் இந்நூல்களின் வரவு அமைந்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது. எனவே, ஏதேனும் ஒரு கோட்பாட்டை அறிமுகப்படுத்தும் தனி நூல்களாகவோ அல்லது பல இலக்கிய இஸங்களை, கோட்பாடுகளை கோர்வையாக்கி விளக்கும் அறிமுகத் தொகுப்பு நூல்களாகவோ இவர்களின் நூல்கள் அடையாளப்படவில்லை. என்றாலும், பிற்காலங்களில் அம்மாதிரியான நூல்களும் வெளிவந்துள்ளமைக்கு இந்நால்வர்களின் நூல்கள் ஒரு முன்னியம்பலாகத் திகழ்ந்துள்ளது என்பதை அறுதியிட இடமுள்ளது.

### துணை நின்றவை

1. சிவத்தம்பி.கா., ஈழத்தில் தமிழ் இலக்கியம், 1978, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

2. சுப்ரமண்யம் க.நா., விமர்சனக்கலை, 2014, புதுப்புனல், சென்னை - 05.
3. சுப்பிரமணிய ஐயர். ஏ.வி., தமிழ் இலக்கியம் தற்காலம், 2023, மலர் புக்ஸ், சென்னை-106.
4. ஞானசம்பந்தன். அ.ச., இலக்கியக் கலை, 2016, முல்லை நிலையம், சென்னை - 17.
5. வரதராசன் மு., இலக்கிய மரபு, 1960, பாரி நிலையம், சென்னை-01.
6. நடராசன்.தி.சு..திறனாய்வுக்கலை, 2022, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 50.
7. பஞ்சாங்கம். க., தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, 2014, அன்னம், தஞ்சாவூர் - 07.
8. பழனிவேலு.கே., கோட்பாடும் திறனாய்வும், 2020, அன்னம், தஞ்சாவூர் - 07.
9. மதியழகன்.ம., தமிழாய்வு - திறனாய்வு வரலாறு, 2009, மித்ர வெளியீடு, சென்னை-24.
10. ரகுநாதன் தொ.மு.சி., இலக்கிய விமர்சனம், 2022, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை - 06.
11. வரதராசன் மு., இலக்கியத் திறன், 2018, பாரி நிலையம், சென்னை - 108.